


# ஹெர்ரிங்போன் குவில்ட்

*இந்த டுடோரியல்ல ஹெர்ரிங்போன் குவில்டிங் பேட்டனை எப்படி செய்யறதுன்னு கத்துக்குவோம்.*







**தேவைப்படும் பொருள்கள்**

ஒவ்வொண்ணும் அரை மீட்டர் பிரின்டட் துணி 4, கடைசியா நமக்கு தேவைப்படற குவில்ட்டோட நீள, அகலத்தை பொருத்து துணியோட அளவு அமையும்.
1 மீட்டர் பிளைய்ன் துணி 1 பீஸ்
கட்டிங் மேட்
குவில்டிங் ரூலர்
ரோட்டரி ஃபேப்ரிக் கட்டர்
அயர்ன்
நூல்
மணி கோர்த்த பின்
கத்தரிக்கோல்

நாம இப்ப ஹெர்ரிங்போன் குவில்ட் பேட்டன் தயாரிக்கப் போறோம், இது 29 இன்ச் நீளமும் 24.25 இன்ச் அகலமும் கொண்டது

இதுக்கு நமக்கு தேவையான பொருள்கள்
ஒவ்வொண்ணும் 8x8 இன்ச் கொண்ட ரெண்டு சதுர பீசஸ்பிளைய்ன் ஆரஞ்ச் துணில எட்டு 8x8 இன்ச் சதுர பீசஸ்


இந்த பர்ஃபெக்டான சதுர பீசஸ எப்படி கட் பண்றதுன்னு கத்துக்க எங்க வெப்சைட்டுக்கு வந்து, செவ்ரான் குவில்ட் வீடியோவ பாருங்க.





குவில்டிங்கிறது  பிளாக்ஸ் கிரியேட் பண்றதும் அதை காபி பண்றதும்தான். நம்ப முதல் பிளாக் செய்ய தொடங்கலாம். நாம ஆரஞ்ச் துணியும், பிரன்டட் துணியவும் யூஸ் பண்ணலாம்.

ஆரஞ்ச் துணியோட ரைட் சைட்-அ பிரன்டட் துணியோட ரைட் சைட்-ல வைக்கணும். இதுல குறிப்பிட்ருக்கற மாதிரி நாம சதுர பீஸ் முழுசும் தைக்கணும். மணிகோத்த பின்-அ யூஸ் பண்ணி துணியோட ரெண்டு பீசஸயும் ஒன்ணா ஹோல்ட் பண்ண பின் பண்ணனும். தைக்க ஆரம்பிக்கலாம்.










உங்க உஷா ஜானோம் மெமரி கிராஃப்ட் 6700 பி குவில்டிங் மெஷினுக்கு துணிய எடுத்து போங்க. நாங்க ஏற்கெனவே ஹெச்.பி. பிளேட்டோட ஹெச்.பி. ஃபூட் செட் பண்ணி மிஷினை தயாரா வெச்சிருக்கோம். ஹெச்.பி. ஃபூட், பிளேட்டோட துல்லியமான தையலும் சரியான தொடக்கமும் இருக்குங்கறதால எந்த வகை துணில தைக்கறதும் சுலபமா இருக்கும். நேர் தையலுக்கு மிஷினை செட் பண்ணிகிட்டு ஸ்கொயரை சுற்றி தைக்க தொடங்குங்க. இது வளைவுகளுக்கும் டாப் ஸ்ட்ரிச்சுக்கும் ரொம்ப சிறந்தது. ஒரு பக்கம் முடியற எடத்துக்கு வந்த உடனே மிஷினை நிறுத்திட்டு, ஊசிய தூக்கிட்டு துணிய திருப்பிகிட்டு தொடர்ந்து தையுங்க. ஸ்கொயரோட எல்லா பக்கமும் தைச்சு முடியற வரை இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. எல்லா பக்கமும் தைச்சு முடிச்சதும், பின்ன நீக்கினதும், அடுத்த ஸ்டெப்புக்குப் போகலாம்.




நீங்க தைச்சது பாக்க இப்படித்தான் இருக்கணும். இப்ப நாம சதுரத்தை நாலு முக்கோணமா பிரிக்கணும். வீடியோல காட்டியிருக்க மாதிரி குவில்டிங் ரூலரை எடுத்துகிட்டு அதை குறுக்கால வையுங்க. சதுர பீஸ் முழுக்க ரோட்டரி ஃபேப்ரிக் கட்டர வெச்சு கட் பண்ணுங்க. மற்ற எல்லாத்துக்கும்கூட இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க.





இப்ப நமக்கு நாலு ட்ரையாங்கிள் பீசஸ் கிடைக்கும். ஒவ்வொரு ட்ரையாங்கிள் பீஸ்லயும் அடிப்பகுதில ஸ்ட்ரிச் லைன் இருக்கும். அடுத்த ஸ்டெப் அயர்ன் பண்றது. ஒரு ட்ரையாங்கிளை எடுங்க, அதை விரிங்க. சீம்-அ ஃபிளாட்டன் பண்ண சீம் லைனை சரியா அயர் பண்ணி பிளாக்குக்கு ஒரு நேர்த்தியான ஃபினிஷிங் குடுங்க. துணியோட ரைட் சைட்-ல இதே ஓபன் பண்ணி அயர்ன் பண்ற பிராசஸ நாம உருவாக்கின எல்லா ட்ரையாங்கிள் பீசஸ்லயும் ரிபீட் பண்ணுங்க.








அயர்ன் பண்ணி முடிச்சதும், கத்தரிக்கோலை எடுத்துக்கங்க. மூலையிலிருந்து தொங்கிட்டு இருக்கு பாருங்க அதை ட்ரிம் பண்ணனும், அப்பதான் ஸ்கொயருக்கு ஒரு பர்ஃபெக்ட் ஃபினிஷிங் வரும். ஒவ்வொரு ஸ்கொயரோட ரெண்டு முலைகளையும் கட் பண்றதை உறுதி செய்துக்கங்க. இதே பிராசஸ நாம உருவாக்கின எல்லா ஸ்கொயர் பீசஸ்லயும் ரிபீட் பண்ணுங்க. கரெக்டா இருக்கும்



ஸ்கொயர்ஸ் தயாராகிருச்சு, இப்ப பேட்டனை பாக்கலாம். வீடியோல காட்டியிருக்க மாதிரி ஸ்கொயர்ஸ விரிங்க. முதல்ல நாம ஒரு பிரின்ட்-அ இடது பக்க மூலைல வைக்கலாம். முதல் ஸ்கொயரோட ஆரஞ்ச் ஸ்ட்ரிப்ப ரெண்டாவது ஸ்கொயரோட ஆரஞ்ச் ஸ்ட்ரிப்ப மேட்ச் பண்ணனும். ரெண்டாவது ஸ்கொயரோட பிரின்டட் சைட்-அ மூணாவது ஸ்கொயரோட பிரின்டட் சைட்-டோட மேட்ச் பண்ணனும். ஒரு டயக்னல் லைன் உருவாக்க ஒரே பிரின்ட் அடுத்து அடுத்து வைக்கப்படறதை உறுதி செய்துக்கணும். மூணாவது ஸ்கொயரோட பிளைய்ன் ஸ்ட்ரிப்ப நாலாவது ஸ்கொயரோட பிளைய்ன் ஸ்ட்ரிப்போட மேட்ச் பண்ணுங்க அப்புறம் நாலாவது பிரின்டட் ஸ்ட்ரிப்போட அஞ்சாவது பிரின்டட் ஸ்ட்ரிப்ப மாட்ச் பண்ணுங்க. ஒரே மாதிரியா இருக்கறதை உறுதி செய்துக்கறது எவ்ளோ ஈசி பாருங்க.



தைக்க ஈசியா இருக்க முதல் ஸ்கொயர் மேல ரெண்டாவதை ரைட் சைட், ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி வையுங்க. மூணாவதை நாலாவது மேல ரைட் சைட், ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி வையுங்க. கடைசி ஸ்கொயர இப்போதைக்கு விட்ருலாம். இந்த வரிசையில இந்த பீஸ் கடைசியா அட்டாச் செய்யப்படும். முதல் ரெண்டு செட்டோட இடது பக்கங்கள பின் பண்ணிட்டு மறுபடியும் தையல் மிஷினுக்கு போகலாம்.





பிரஸ்ஸர் ஃபூட்-க்கு அடியில உள்ள ஒரு ஸ்கொயரோட எட்ஜ அட்ஜஸ்ட் பண்ணுங்க. மேலேந்து கீழ வரை ஒரு நேர் தையல் போடுங்க. நூலை கட் பண்ணுங்க. பிரஸ்ஸர் ஃபூட்ட தூக்குங்க. இப்ப இன்னொரு ஸ்கொயருக்கு அதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க.




ஒன்றா சேர்ந்து தைச்சப்பறம் ஸ்கொயர்ஸ் பாக்க இப்படித்தான் இருக்கணும். தைச்ச ஸ்கொயர்சோட முதல் செட்-அ விரிச்சு இதுல காட்யிருக்க மாதிரி ரெண்டாவது செட் பக்கத்தில வையுங்க. ஹெர்ரிங்போன் பேட்டன் டேமேஜ் ஆகாம இருக்கறதையும் துணி தலைகீழா இல்லாம இருக்கறதையும் உறுதி செய்துக்கொங்க





தைச்ச ஸ்கொயர்சோட முதல் செட்-அ ரெண்டாவது செட் மேல ரைட் சைட், ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி செட் பண்ணுங்க. இந்த ரெண்டு செட்டையும் நாம இப்ப ஜாயின் பண்ணப்போறோம்.

ஸ்கொயர்சோட இடது எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட் அடில செட் பண்ணிகிட்டு நேர் தையல் போடுங்க, இது முடிஞ்சதும் நூல கட் பண்ணிருங்க. தைச்ச பீசஸ பிரிச்சு அதை விரிங்க. இப்ப தனியா உள்ள ஸ்கொயர் துணிய எடுத்துக்கலாம். பீஸ எடுத்துட்டு துணி டிசைனோட மாட்ச் பண்ணுங்க. ஒற்றை ஸ்கொயரை ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்தா மாதிரி தைச்ச 'ரோ' மேல வெச்சு இதுல காட்டி இருக்க மாதிரி விளிம்புல நேர் தையல் போடுங்க.





நம்ப முதல் 'ரோ' தயார். துணியோட ரைட் சைட்லேந்து பாக்க தையல் இப்படித்தான் இருக்கும். அதை திருப்பும்போது சீம் பாக்க இப்படித்தான் இருக்கும். இப்ப விரலால சீம்-அ ஓபன் பண்ணி சீம் அலவன்ஸ அயர்ன் பண்ணி ஃபிளாட்டன் பண்ணனும். இது துணிய ஈவன் பண்ணி அலவன்ஸ ஃபிளாட்டன் பண்ணும். அயர்ன் பண்றப்ப விரல்ல சூடு பட்டுக்காம கவனமா இருங்க. நாம விரும்பற மாதிரி லுக் வர ஒவ்வொரு சீம்-யும் ஃபிளாட்டன் பண்ணனும்.

இப்ப 'ரோ' நம்பர் 2-க்கு போகலாம். முதல் 'ரோ'-க்கு பிரின்டுல ஆரம்பிச்சதால, ரெண்டாவது 'ரோ'க்கு பிளைய்ன் ஆரஞ்ச்-ல தொடங்கப்போறோம். வீடியோட காட்டியிருக்க மாதிரி ஸ்கொயர்ச பிரின்டுக்கு பிரன்டயும், பிளைய்னுக்கு பிளைய்னவும் மேட்ச் பண்ணுங்க. ரெண்டாவது 'ரோ'வோட எல்லா பீசஸ்யும் விரிங்க. இப்ப பாருங்க பேட்டன்ஸ் ஒரே லைன்ல இல்லாம பிரேக் ஆகி இருக்கும். இதுதான் ஹெர்ரிங்போன் பேட்டன்.



முதல் 'ரோ' மாதிரியே ரெண்டாவது 'ரோ'வையும் நாம தைக்கணும். முதல் ஸ்கொயரை ரெண்டாவது மேலயும், மூணாவதை நாலாவது மேலயும் வெச்சிருங்க. துணிகளை ஒன்னா வெச்சு ஏற்கெனவே செய்தா மாதிரி தையுங்க.


நாம ஏற்கெனவே 'ரோ' கிரியேட் பண்ணி சீம் அலவன்ஸ்சையும் அயர்ன் பண்ணியாச்சு. இது பாக்க இப்படித்தான் இருக்கணும். பேட்டன் சரியா இருக்கறதை உறுதி செய்துகிட்டு சரியான ஆர்டர்ல எல்லா ஸ்கொயர்சையும் தைச்சிருங்க.


இந்த ரெண்டு வரிசையையும் ஒன்னா சேர்க்கலாம். டாப் 'ரோ'-வ பாட்டம் 'ரோ' மேல வையுங்க, ரைட் சைட், ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்கணும். சீம் லைன் மேட்ச் ஆகணும் அப்புறம் அதை சரியான இடத்தில வெச்சு பின் பண்ணனும். துணி நழுவிராம சரியான இடத்தில இருக்க எல்லா சீம் அலவன்ஸ்சையும் பின் பண்ணிருங்க. பின் பண்ணின சைட்ல இப்ப நாம தைக்கப் போறோம்.






துணியோட முனைய பிரஸ்ஸர் ஃபூட் அடியில அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. ஒரு ஸ்கொயர் முனைக்கு வந்த உடனே நிறுத்துங்க. பின் நீக்கிட்டு சீம் அலவன்சோட ரெண்டு முனைகளையும் ஃபிளாட்டன் பண்ணுங்க. ஃபிளாட்டன் பண்ணின சீம் அலவன்சோட ரெண்டு முனைகளையும் தையல் போகுதான்னு உறுதி செய்துக்கங்க. அப்பப்ப நிறுத்திட்டு பின்-அ எடுத்துட்டு சீம் அலவன்ஸ ஃபிளாட்டன் பண்ணிட்டே இருங்க, துணி முனை வர்ற வரை தொடர்ந்து தையுங்க.





இப்ப ரெண்டு 'ரோ'வும் ஒன்னா தைக்கப்பட்டாச்சு. ரைட் சைட்லேந்தும், ராங் சைட்-லேந்து அது பாக்க இப்படித்தான் இருக்கணும். இப்ப ரைட் சைட் மேல இருக்கற மாதிரி 'ரோ'-வ திருப்புங்க. அதை கட்டிங் மேட் மேல வையுங்க.









இதே மாதிரியே நாம இன்னும் ரெண்டு 'ரோ' கிரியேட் செய்துருக்கோம். ஒன்னு கீழ ஒன்னை வையுங்க. எப்படி பேட்டன் கலையாம வெச்சிருக்கோம் பாருங்க. பிளைய்ன் ஆரஞ்ச் ஸ்ட்ரிப் எப்பவும் பிரின்டட் ஸ்ட்ரிப்போட மேட்ச் ஆகும். குவில்ட்டோட இறுதி பீஸ தயாரிக்க இந்த மூணு பீசஸயும் ஒன்னா ஜாயின் பண்ணப்போறோம். ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்க மாதிரி வையுங்க, சீம்ஸ மேட்ச் பண்ணி பாட்டம் 'ரோ'வ பின் பண்ணுங்க அப்புறம் டாப் 'ரோ'வ சென்டர் 'ரோ'ல பின் பண்ணுங்க. இப்ப வெறும் ரெண்டு ஸ்ட்ரிச் லைன்ஸ்தான் போடணும். ஒண்ணு சென்டர் 'ரோ'வோட டாப்லயும் இன்னொன்னு சென்டர் 'ரோ'வோட பாட்டம்லயும்.

அவ்வளவுதான்! உங்க முதல் ஹெர்ரிங்போன் குவில்ட் கிரியேட் பண்ணிட்டீங்க. கிரியேட்டிவா யோசிங்க, தனியா தெரியறா மாதிரி வெவ்வேற கலர் காம்பினேஷனை யூஸ் பண்ணுங்க. உங்க மெத்தைக்கு இது ஒரு அருமையான ஹைலைட்டா அல்லது ஒரு அற்புதமான சுவர் அலங்காரமா இருக்கலாம்.